ஈழநாடு 05 Oct 2012 EELANADU

# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் விடுக்கும் அறிவித்தல்

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா நடைமுறைப்படுத்த இருக்கும் உயர்தர வகுப்பு விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான நிதியுதவித் திட்டம்.

எமது கல்லூரியில் க.பொ.த சாதாரணம் கற்று நல்ல பெறுபேற்றைப் பெற்றவர்களும் ஓரளவு வசதி படைத்தவர்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு சென்று விடுவது காலங் காலமாக நடைமுறையிலுள்ள நிகழ்வாகும். இதன் காரணமாக எமது கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவு நலிவடைந்து மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளமையினால் வறிய மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வி என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

மாணவர்களை எமது கல்லூரியில் கற்க வைப்பதற்கும், உண்மையிலேயே வறிய மாணவர்களுக்கு உதவுமுகமாகவும் எமது கல்லூரியின் தரத்தை மேம்படுத்தி விஞ்ஞானப் பிரிவினை வலுப்படுத்துதல் அவசியமாகும். இது எமது சக்திக்கு அப்பாற்பட்ட விடயமாகும். இருந்த போதும் இப்பெரும் கைங்கரியத்தினை நிறைவேற்றும் ஓர் பரீட்சார்த்த முயற்சியாகத் தற்போது விஞ்ஞானப் பிரிவில் கற்கும் வசதியற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பாக (யாழ்ப்பாணம் சென்று ரியூசன் கற்றலுக்கான) நிதியுதவி வழங்குவது அவசியமெனக் கருதி அதற்கான நிதியுதவித் திட்டம் ஒன்றை ஒக்ரோபர் 2012 முதல் செயற்படுத்தத் தீர்மானித்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

இத்திட்டத்தின் மூலம் 9 க.பொ.த உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் பயன்பெற உள்ளார்கள். மாணவர் ஒருவருக்கு மாதம் 2000.00 ரூபா வீதம் மாதாமாதம் 18,000.00 ரூபா நிதியுதவியை வழங்கவிருகின்றோம் என்பதைச் சங்கத்தின் சார்பில் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

காலத்தின் கட்டாயமான இச்சீரிய பணியினைத் திட்டமிட்டவாறு ஆரம்பித்து தொடர்ந்து நடை முறைப்படுத்துவதற்குச் சங்கத்தின் அங்கத்தவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் புலம்பெயர் மண்ணின் வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் தமது முழுமையான ஆதரவையும் தம்மால் இயன்ற பங்களிப்பையும் நல்குமாறு சங்கத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகட்கு**

**செழியன் 416-949-7795**

**சிறீதரன் 416-661-3494**

**சிவா 416-562-4141**